**தலைப்பு 320 – சிவில் பாதுகாப்புத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு நோக்கெல்லை**

---

தலைப்பு 320 – சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை எதிர்வரும் நாட்களில் இலங்கை சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128(1) கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற்கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்தல். | 1. பிரதான செயற்பாடு களுக்கு முரணாக செயற்பாடுகள்<br>2. பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச் சாத்திய மாக தயாரிக்கப்படாமை | 2.1.1<br>2.6 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாடு மற்றும் கணக்கீட்டிற்காக அமைப்பு வெற்றிகரமானது எனவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசுக்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை பிழையின்றியும் தீர்மானிப்பதற்கு அவற்றை முறைப் பிரகாரகும் முற்றாகவும் தாமதமின்றியும் சேகரிப்பதற்கு மற்றும் கிடைக்கும் பணத்தை கணக்கீடு செய்வதற்கும், அரசின் சார்பாக பொறுப்புக்களை மேற்கொள்வதற்கு அதிகாரம் அளிப்பதற்காகவும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குவதின் மேற்பார்வை மற்றும் பரிசோதனை செய்வதற்கு மற்றும் அந்த அரச நிதியத்தில் இருந்து தாமதமின்றியும் பிழையின்றியும் கொடுப்பனவு செய்வதற்கு அவற்றில் போதியளவு ஏற்பாடுகள் மேற்கொள்வது எனவும், | 1. பிரதான செயற்பாடுகளுக்கு முரணாக செயற்பாடுகள்<br>2. பெறுகை செயற்பாடுகளை செயற்படுத்துவதில் குறைபாடுகள்<br>3. பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுவதில் குறைபாடுகள் | 2.1.1<br>2.3.1(அ),(ஆ)<br>2.1.2(அ) |
| 128(1)(ஈ) | பெறுவனவுகள், கொடுப்பனவு மற்றும் வினியோகம் என்பவற்றிற்காக போதியளவு உள்ளகச் சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம் முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதெனவும் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறைபாடுகள் | 2.7 |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது திறைசேரியால் கேட்கப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள் சரியான காலநேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதாகவும் | வருடாந்த செயலாற்றல் அறிக்கை தாமதமாக சமர்ப்பிக்கப்படல் | 2.1.3 |
| 128(1)(எ) | அரசாங்கத்திற்கு வருமதியான பணத்தை சேகரிப்பதில் செயன் முன்னேற்றத்தைக் காட்டும் அறிக்கை நாளாந்தம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அனுப்புதல் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான குறைபாடு | 2.7 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள கட்டண ங்கள் ஆகியவற்றை அறவீடு செய்வதற்கு விஷேட ஏற்பாடுகள் மேற்கொள்வ தெனவும் அந்த கருமம் சாட்டப்பட்டிருந்த உத்தியோ கத்தவர்களினால் நிலுவை பணம் தொடர்பாக அவற்றை அறவீடு செய்தவை விரைவு படுத்துவதற்காக எடுக்கப்பட்ட கட்டங்கள் தொடர்பாக குறைந்தளவு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அல்லது வேறு முறையில் கட்டளையிட்டுள்ளவாறு தனக்கு அறிவிப்பதாகவும், | அரசாங்க உத்தியோகத்தர் களுக்கான முற்பணக் கணக்கில் நிலுவையான கடன் மீதிகளை அறவிடல். | 2.7 |
| 128(1)(ஐ) | அரசாங்க அலுவல்கள் நிறைவேற்றும் போது எதிர்பார்க்கும் சிக்கனம், வினைத்திறமை, முறைசார் விதமாக மற்றும் நேர்மைத் தன்மை ஆகிய விடயங்கள் தொடர்பாக போதிய கவனத்துடனும் தனது திணைக்களத்தின் அலுவல் கள் மேற்கொள்வதெனவும் | 1. முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்<br>2. சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.4(அ)(ஆ)<br>2.5 |
| 128(1)(க) | கணக்கீட்டு உத்தியோகத்தராகப் பொறுப்பேற்றிருக்கும் செலவுத் தலைப்பின் ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டம் சம்பந்தமான நிதியாண்டு முடிவில் ஓர் ஒதுக்கீட்டு கணக்கு, பிரதான கணக்கீட்டு உத்தியோகத்த ருக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது எனவும் (நி.பி. 150 பார்க்கவும்) | ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்ட குறைபாடு கள் | 2.6(அ) |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றுகை

#### 2.1.1 பிரதான கருமங்களுக்கு முரணாக செயற்பாடுகள்

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு சொந்தமான பௌதீக வளங்கள், மனித வளங்கள் மற்றும் உள்ளக நிதியங்களை பயன்படுத்தி 22 சேனைகள் மற்றும் 05 பயிற்சி பாடசாலைகளின் மூலம் பல்வேறு தன்மையான செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டிருந்த போதிலும் திணைக்களம் தனது தூரநோக்கு சேவை மற்றும் கருமங்களின் கீழ் அவ்வாறான செயற்திட்டங்கள் நடாத்திச் செல்லல் நிறுவனத்தின் குறிக்கோளாக இனங்கண்டிருக்கவில்லை.

## 2.1.2 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை

சிவில் பாதுகாப்புத் திணைக்களம் 31,981 பாதுகாப்புப் படையினர் மற்றும் 5,163 பெண் உத்தியோகத்தர்களை கொண்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது இந்த சேனைகளின் உத்தியோகத்தர்கள் 15,903 பேரை ஈடுபடுத்தி வருமானம் உருவாக்கக் கூடிய 1,589 பல்வேறு செயற்திட்டங்கள் நாடுபூராகவும் செயற்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) காட்டு யானைகளின் அச்சுறுத்தல்களுக்கு ஆளாகும் கிராமங்கள்/ பகுதிகளில் யானை மனித மோதல்களை குறைக்கும் குறிக்கோளுடன் வனசீவராசிகள் திணைக்களத்தினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த மின்வேலி (யானை வேலி) களின் பராமரிப்பு விடயங்கள் மற்றும் கண்காணிப்பு அலுவல்களுக்காக சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் படையினரின் உதவி பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கடுநாயக சேனையினால் வடமேல் மாகாணத்தில் 12 பிரதேசங்கள் அடங்கும் விதமாக 252 கி.மீ. தூரம் மின்வேலிகளை பராமரிக்கும் அலுவல்கள் மற்றும் மேற்பார்வை அலுவல்களுக்காக 79 படையினர் இணைக்கப்பட்டிருந்தனர். எனினும் இணைக்கப்பட்டிருந்த சிவில் பாதுகாப்பு படையினர் குறிப்பிட்ட விடயத்தை உரிய முறையில் நிறைவேற்றவில்லை என 2017 ஜூன் மற்றும் ஜூலை மாதங்களின் போது அவ்வப் பகுதிகளில் காணப்பட்ட சங்கங்கள், அமைப்புக்கள் மற்றும் தனி நபர்களினால் சேனைக்கு முறைப்பாடுகள் அனுப்பியிருந்த 06 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) கட்டுநாயக சேனையின் கீழ் செயற்பட்ட கதிரான விவசாய செயற்திட்டத்தில் 04 வகையான பயிரினங்கள் பயிர்செய்யப்பட்டிருந்ததுடன், கடும் வரட்சியின் காரணமாக அப் பயிரின பயிர்செய்கை அழிக்கப்பட்டதினால் வருமானம் ஏதும் உழைக்க முடியாதிருந்தது. எனினும் வரட்சியின் காரணமாக அவ்வாறு சேதம் ஏற்பட்டது என உறுதிப்படுத்துவதற்காக விவசாய ஆய்வு உதவியாளர், கிராம உத்தியோகத்தர் ஆகிய உத்தியோகத்தர்களின் அறிக்கை ஆகிய எழுத்து மூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) வில்பத்து சேனையினால் செயற்படுத்தப்பட்ட கொண்டச்சி மரமுந்திரிகை பயிர்செய்கைச் செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்டத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் மரமுந்திரிகை விளைச்சல் களஞ்சியப்படுத்தும் போது போதியளவாக அளவை செய்து களஞ்சியப்படுத்தப்படாததுடன், விற்பனை செய்யும் சந்தர்ப்பத்தில் அளவை செய்து விற்பனை செய்யப்படுகின்றது. அதே போல் களஞ்சியங்களில் இருப்புக்களை களஞ்சியப்படுத்தி இருக்கும் போது ஏற்படக் கூடிய வழமையான விரயங்களை இனங்காண்பதற்கு செயற்பட்டிருக்கவில்லை.

(ii) செயற்திட்டத்தின் கீழ் 1,200 ஏக்கர் அளவு மரமுந்திரிகை பயிர்செய்யப்பட்டிருந்த போதும் மரங்கள் தொடர்பாக உயிர் தரவுத் தகவல் உட்படுத்தி மரப் பதிவேடு ஒன்று பேணப்படல் அல்லது தகவல்களைப் பதிவு செய்து பேணப்படுவதற்கான வேலைத் திட்டமொன்று காணப்படவில்லை.

(iii) செயற்திட்டத்துடன் இணைக்கப்பட்டிருந்த மாதாந்த சராசரி 718 படையினரின் நாளாந்த கடமைகள் காட்டுதல் தொடர்பாக விபரங்கள் பேணப்பட்டிருக்காததுடன் படையினரின் நாளாந்த கடமைகள் நிறைவேற்ற நடைமுறையொன்றும் காணப்படவில்லை.

(ஈ) அம்பாறை சேனையினால் நடாத்தப்பட்டு வரும் நெல் பயிர்செய்கை செயற்திட்டங்களினால் ஏக்கர் ஒன்றிற்கு சராசரி விளைச்சல் என சிறுபோகத்தில் 945 கி.கி. உம், பெரும் போகத்தில் 896 கி.கி. உம் கிடைத்திருந்தது. எவ்வாறாயினும் பெரும் போகத்தில் அப் பகுதியில் அமைந்துள்ள செயற்திட்ட அலுவலகத்தினால் பெற்றிருந்த நெல் விளைச்சலின் அளவு 3050 கி.கிராம் இருந்ததுடன் அதன் படி ஏக்கருக்கு சராசரி விளைச்சல் 435 கி.கி. ஆகிய கணிசமான குறைந்த பெறுமதி ஒன்றினை பெற்றிருந்தது.

(உ) மஹஓயா சேனையின் கீழ் காணப்பட்ட 66 நெல் பயிர்செய்கை செயற்திட்டங்களின் மூலம் 2016/17 பெரும் போகத்தில் விளைச்சல் பெற்றிருந்த நாடு நெல், சிவப்பு நெல், சம்பா நெல், கீரி சம்பா நெல் அளவுகள் முறையே 417,592 கி.கி, 113,270 கி.கி, 29,027 கி.கி. மற்றும் 15,518 கி.கி விற்பனை செய்வதற்காக அப் பிரதேசத்தில் காணப்பட்ட 03 நிறுவனங்களில் இருந்து கூறுவிலைகள் அழைக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட விற்பனையாளருக்கு எல்லா வகையான நெல் 01 கி.கி. ரூபா 35 வீதம் விற்பனை செய்யப்பட்டிருந்தது. எனினும் அனுராதபுர பிரதேசத்தில் ஹொரவ்பதான சேனையினால் 1 கி.கி நெல் ரூபா 52 விலைக்கு அவர்களின் விளைச்சலை விற்பனை செய்திருந்ததென அவதானிக்கப்பட்டது.

(ஊ) சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் செயற்படுத்தப்படும் செயற்திட்டங்களில் தெரிவு பரிசோதனையில் தெரிவு செய்யப்பட்ட செங்கற்கள், சீமெந்துக் கற்கள், விளக்குத் திரி, பிரம்பு கூடைகள் உற்பத்தி மற்றும் அண்ணாசிப் பயிர்செய்கை ஆகிய செயற்திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனைகளின் போது இந்த செயற்திட்டங்களில் ஒரு படையினரின் மாதாந்த சராசரி பங்களிப்பு முறையே ரூபா 3,470 ரூபா 2,976, ரூபா 5,721 ரூபா 5,550 மற்றும் ரூபா 5,140 தொகைகள் ஆகும்.

(எ) கதிர்காமம் சேனையில் தெமளிய விவசாய செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கதிர்காம சேனையின் தெமலிய விவசாய செயற்திட்டத்திற்காக 2013 ஜூன் 19 ஆம் திகதி வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான 59.5 ஹெக்டயர்கள் அளவான காணி ஒன்று சுற்றாடலுடன் பற்றுள்ள பயிர்செய்கை நிலம் ஒன்று நிர்மாணிப்பதற்காக, உடன்படிக்கை ஒன்றின் மூலம் பெற்றிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2016 ஜூன் 19 திகதி உடன்படிக்கை காலம் முடிவடைவதுடன் காலநீடிப்பு பெற்றுக்கொள்ளாமல் 2017 திசெம்பர் 31 திகதி வரை செயற்திட்டம் இடையறாமல் செயற்படுத்தப்பட்டிருந்தது.

(ii) அதே போல் செயற்திட்டத்திற்கு இணைக்கப்பட்ட படையினரால் மேற்கொள்ளப்பட வேண்டிய கருமங்கள் எழுத்துமூலமாக சாட்டப்பட்டிருக்காததுடன் அதன் பிரகாரம் படையினர் நாளாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய கருமங்கள் தொடர்பாக சான்றுகள் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. சேனை தலைமையகம் மற்றும் செயற்திட்டத்திற்கு இடையே சுமார் 60 கி.மீ. தூரம் காணப்பட்டமையால் தலைமையகத்தினால் செயற்திட்டத்தை மேற்பார்வை செய்தல் பலவீன மட்டத்தில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

### 2.1.3 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2002 செப்தெம்பர் 12 திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமெனினும், அவ்வறிக்கை 2018 ஜுலை 31 திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை.

### 2.2 நிலைபேறான அபிவிருத்தி

நிலைபேறான அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரலில் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டிக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்காக சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினால் தமது நோக்கெல்லையின் கீழ்வரும் கருமங்கள் தொடர்பாக செயற்பட வேண்டிய விதம் தொடர்பாக அறிந்திருந்தனர்.

(அ) நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக திணைக்களத்தினால் அறிந்திருந்து தனது நோக்கெல்லையின் படி நெருங்க வேண்டியிருந்த நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை இனங்கண்டிருந்தது.

(ஆ) அதன் பிரகாரம் தாங்கக் கூடிய சுத்தமான வலுசக்தி மற்றும் பட்டினியை ஒழித்தல் ஆகிய குறிக்கோள்கள் மீது அடிப்படையாகக் கொண்டு இலக்குகள் மற்றும் இலக்குகளை நோக்கி நெருங்க வேண்டிய திருப்பு முனைகளும், இலக்குகள் மீது நெருங்குவதை அளவை செய்வதற்காக சுட்டிகளும், இனங்காண்பதற்காக நடடிவக்கைகள் எடுப்பதாக அறிவித்திருந்தது.

(இ) நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை செயற்படுத்துவது தொடர்பாக சிவில் பாதுகாப்பு திணைக்களம் தொடர்பாக அக்கறை செலுத்தும் தரப்பினரை இனங்கண்டிருந்த போதிலும் அவர்களிடம் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) தாங்கக் கூடிய சுத்தமான வலுசக்தி குறிக்கோள்களின் கீழ் ரூபா 29 மில்லியனிற்கான மின்சார செலவுகள் குறைத்தல் ஆகிய இலக்கு மாத்திரம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தி இருந்ததுடன், பட்டினியை ஒழிக்கும் குறிக்கோளின் கீழ் நீர்பாசன முறைமையின் கீழ் தரிசு வயல் நிலங்களை விளைநிலமாக்கும் இலக்குகளை செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தியிருக்கவில்லை.

(உ) திணைக்களத்தினால் இனங்கண்டிருந்த நிலைபேறான அபிவிருத்தி சுட்டிகளுக்காக அனைத்து தரப்பினர்களையும் பிரதி நிதிப்படுத்தும் வகையில் தரவுகள் சேகரிக்கும் செயல்முறை ஒன்று இனங்கண்டிருக்கவில்லை. எனினும் தரவுகள் சேகரிக்கும் கருமத்திற்காக உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்ப்பதுடன், எதிர்கால நிகழ்ச்சித் திட்டம் திட்டமிடல் கட்டத்தில் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### 2.3 பெறுகை செயன்முறையினூடாக வழங்கல்களில் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளல்

சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினால் அரச பெறுகைகள் வழிகாட்லின் பிரகாரம் செயற்பட்டு வழங்கள்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த ரூபா 868.3 இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 837.37 மில்லியனுக்கான ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

**2.3.1 பெறுகை செய்முறையை செயற்படுத்துதல்**

-----------------------------------------------------

(அ) (i) கொண்டச்சி மரமுந்திரிகை செயற்திட்டத்தின் கீழ் மரமுந்திரிகை பயிர்செய்யப்பட்டிருந்தது 1,200 ஏக்கர் காணிக்குத் தேவையான விதமாக நிலத்தை தயாரிப்பதற்காக 7,200 இயந்திர மணித்தியாலங்களை பயன்படுத்துவதற்கு ரூபா 31,644,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் விடயம் முடிவடைந்த போதும் செலவிடப்பட்டிருந்த மணித்தியாலயங்களின் எண்ணிக்கை 8,770 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கான செலவு ரூபா 38,324,900 தொகை ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் இதற்கான மதிப்பீடுகள் நியாயமான முறையில் தயாரித்திருக்காமையால் மேலதிகமாக 1570 இயந்திர மணித்தியாலங்களுக்காக ரூபா 6,680,900 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் புதர் காடுகள் துப்பரவு செய்தல் மற்றும் கழிவு பொருட்களை அகற்றுதல் 2017 மார்ச் 18 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும் அவ் விடயம் 2017 செப்தெம்பர் 11 திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் பராமரிப்பு விடயங்கள் திணைக்கள சேனைப் படையினரால் 238,068 மனித மணித்தியாலம் செலவிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அவ் விடயங்கள் உரிய முறையில் நிறைவேற்றப்படாமையால் இயந்திரங்களை பயன்படுத்த வேண்டி நேரிட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ii) இந்த மரமுந்திரிகை செயற்திட்ட காணியை துப்பரவு செய்வதற்காக சேவை வழங்குனர் ஒருவர் தெரிவு செய்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த விலைமனு விவரக் குறிப்புக்களின் பிரகாரம் விலைமனுதாரர்கள் குறிப்பிட்ட பரப்பில் செயற்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றியது தொடர்பாக கடந்த 05 ஆண்டுகள் தொடர்பாக நிறைவேற்றிய செயற்திட்ட அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், எந்த விலைமனு தாரரினாலும் அவ்வாறு கடந்த 05 வருடங்களில் வெற்றிகரமாக செயற்திட்டங்களை நிறைவேற்றியதற்கான செயற்திட்ட அறிக்கைகள் சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஆ) 2017 ஆண்டிற்கான பெறுகை திட்டத்தின் பிரகாரம் படையினருக்கு 21,000 விசில்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 4,284,000 இற்கான தொகையொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 4,709,250 தொகை செலவிடப்பட்டிருந்தது. குறிப்பிட்ட மதிப்பீடு பெறுமதி கூட்டிய வரியினை கவனம் செலுத்தாமல் தயாரித்திருந்த காரணத்தினால் மதிப்பீட்டுத் தொகையை மிகைத்து ரூபா 425,250 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**2.4 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்**

------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வில்பத்து சேனையின் கீழ் நடாத்தப்பட்டு வரும் ஆடைத் தொழிற்சாலையில் கடமையாற்றும் 85 பேருக்கு உணவுக் கொடுப்பனவாக 2017 ஜனவரி முதல் 2017 ஆகஸ்ட் வரை காலப்பகுதியில் கடமைக்காக வந்திருக்காத 1,609 மனித மணித்தியாலங்களுக்காக உத்தியோகத்தர்களுக்கு ஒரு நாளைக்கு ரூபா 250 வீதம் ரூபா 402,250 தொகையொன்று மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பக்கிஎல்ல உப சேனை தலைமையகத்தில் விரிவுரை மண்டபமொன்று நிர்மாணிப்பதற்காக 2016 அக்தோபர் 06 திகதி ஒரு உத்தியோகத்தருக்கு வழங்கியிருந்த ரூபா 1,500,000 இற்கான முற்பணத் தொகை 2017 திசெம்பர் 31 திகதி வரை தீர்த்திருக்கவில்லை. இது தொடர்பாக குறித்த உத்தியோகத்தர் மேற்கொண்டிருந்த விளக்கத்தின் பிரகாரம் அந்த முற்பணத் தொகையில் ரூபா 1,374,000 தொகை உயர் உத்தியோகத்தர் ஒருவரினால் பெறப்பட்டிருந்ததுடன் 2017

திசெம்பர் 31 திகதி வரை அந்த பணத்தை திருப்பி தீர்ப்பதற்கு தேவையான கட்டிடப் பொருட்கள் அப் பகுதியில் உள்ள வியாபார நிலையம் ஒன்றில் இருந்து கொள்வனவு செய்ததாக ரூபா 1,374,000 பணத்தை தீர்ப்பதற்கு ஏற்ற விதமாக 2016 அக்தோபர் 06 ஆம் திகதி கொடுப்பனவு உறுதிச் சான்று ஒன்று சமர்ப்பித்திருந்த போதிலும் குறிப்பிட்ட கட்டிடப் பொருட்கள் சேனையினால் இலவசமாக பெற்றிருந்தார்கள் என அவதானிக்கப்பட்டது.

**2.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பெறுகை திட்டத்தின் படி 2017 ஆண்டின் போது வேலைக்கான ஆடைகள் (Black Over Roll) 20,000 வழங்குவதற்காக ரூபா 15,800,000 தொகை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது 02 சந்தர்ப்பங்களில் வேலைக்கான ஆடைகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 17,630,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் வேலைக்கான ஆடைகளுடன் கடமையில் ஈடுபடும் படையினருக்காக ஒரு வருடாத்திற்கு ஒரு வேலைக்கான ஆடைத்தொகுதி வழங்கப்படுவதெனவும் அவ்வாறாக கடமையாற்றும் படையினர் 13,000 தொகையொன்று என கண்டறியப்பட்டது. அதன் பிரகாரம் வேலைக்கான ஆடைகள் சுமார் 7,000 மேலதிகமாக கொள்வனவு செய்வதற்காக ரூபா 6,170,500 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. வேலைக்கான ஆடைகளின் வருடாந்தத் தேவையை கணிக்கும் நடைமுறை ஒன்று காணப்படாமையின் காரணத்தினால் தேவையை விட கூடுதலாக கொள்வனவு செய்வதற்கு நேரிட்டிருந்தது. அதே போல் 2017 ஜனவரி 01 திகதி அளவில் களஞ்சியத்தில் அவ்வாறான வேலை ஆடைகள் 5,408 மீதியாகக் காணப்பட்டதெனவும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**2.6 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 5 வருட காலப்பகுதியில் சிவில் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு மீதான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2013 | மீண்டுவரும் | 10,685.38 | 10,683.91 | 1.47 | 0.01 |
| | மூலதன | 67.65 | 67.15 | 0.50 | 0.74 |
| | **மொத்தம்** | **10,753.03** | **10,751.06** | **1.97** | **0.01** |
| 2014 | மீண்டுவரும் | 12,030.20 | 12,029.31 | 0.89 | 0.01 |
| | மூலதன | 120.80 | 120.80 | - | - |
| | **மொத்தம்** | **12,151.00** | **12,150.11** | **0.89** | **-** |
| 2015 | மீண்டுவரும் | 17,289.92 | 17,114.02 | 175.90 | 1.02 |
| | மூலதன | 188.00 | 187.37 | 0.63 | 0.33 |
| | **மொத்தம்** | **17,477.92** | **17,301.39** | **176.53** | **1.01** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2016 | மீண்டுவரும் | 17,213.63 | 16,677.19 | 536.44 | 3.12 |
| | மூலதன | 318.06 | 310.47 | 7.59 | 2.38 |
| | **மொத்தம்** | **17,531.69** | **16.987.66** | **544.03** | **3.1** |
| 2017 | மீண்டுவரும் | 16,720.25 | 16.549.88 | 170.37 | 1.02 |
| | மூலதன | 280.70 | 235.70 | 45.00 | 16.03 |
| | **மொத்தம்** | **17,000.95** | **16,785.58** | **215.37** | **1.27** |

**(அ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

**ஒதுக்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தாமை**

01 செலவு விடயத்திற்காக ஒதுக்கியிருந்த ரூபா 830,960 இற்கான தேறிய ஏற்பாடுகள் முழுவதும் பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.7 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் 32001 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறை ந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 500 | 496.22 | 300 | 302.09 | 1,000 | 272.11 |

**நிலுவை கடன் மீதியை அறவீடு செய்யாமை**

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ள உத்தியோகத்தர்களின் மீதிகள் தவிர ரூபா 1,122,422 தொகையாக இருந்தது.

## 2.8 பொது வைப்புக் கணக்கு

சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் 3 வைப்புக் கணக்குகளில் 2017 திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 422,460,619 தொகையாகும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 வருடங்களை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 5,739,563 இற்கான 02 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் பல்வேறு கருமங்களுக்காக வழங்கியிருந்த ரூபா 5,688,563 இற்கான தொகை உரிய செய்பணிகள் நிறைவேற்றாமல் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

## 2.9 மனிதவள முகாமைத்துவம்

### 2.9.1 இணைக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள, உள்ளவாறான, வெற்றிட மற்றும் பதவியணி மிகை மீதான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்கான சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் ஆளணி வேதனங்கள் செலவின தொகுதிக்காக ரூபா 15,551 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு ஆளுக்கான செலவு ரூபா 417,180 தொகை ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 23 | 14 | 09 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 84 | 54 | 30 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 26 | 17 | 09 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 40,460 | 37,189 | 3,271 | - |
| (v) | அமைய, ஒப்பந்த | - | 02 | - | 02 |
| | | 40,593 | 37,276 | 3,319 | 02 |